ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X

புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 - வெளியிடப்பட்டது ஜூன் 2023

SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

==========================================================================

# சங்க இலக்கியத்தில் மூங்கிலின் கணு

முனைவர் ம.இராணி,
தமிழ்த்துறை தலைவர்,
நாசரேத் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஆவடி

==========================================================================

ஆய்வுச் சுருக்கம்:

சங்க இலக்கியத்தில் மூங்கிலின் கணு பலவிடங்களில் எடுத்தாளப்படுகிறது. பாலை நிலத்தின் வெம்மையை விளக்குமிடத்து வேய்க்கண் என்ற சொல்லானது இடம் பெறுகிறது. தலைவியின் தோள்களை விளக்குமிடத்து அமைக்கண் இடை என்ற சொல்லும், தலைவனின் நிலையை எடுத்துரைக்குமிடத்து கண் கண் அகைய என்ற சொல்லும் சங்க இலக்கியப் பாடல்களில் இடம் பெறுகிறது. கணுக்களை உடைய மூங்கில் குழாயில் பொருள்களைச் சேமிப்பது பொருள்களின் தன்மையைக் கெடாமல் பாதுகாக்கும் என்ற உத்தியைச் சங்க கால மக்கள் அறிந்திருந்தனர் என்பதை ஆய்வினால் உய்த்துணர முடிகிறது. கணுக்களைக் கொண்டுள்ள மூங்கிலால் செய்யப்பட்ட நெடுவங்கியம், புல்லாங்குழல் போன்ற இசைக் கருவிகள் இடம்பெறுவதைச் சங்க இலக்கியப் பாடல்கள் பதிவு செய்கின்றன. சங்க இலக்கியத்தில் மூங்கிலின் கணு என்ற சொல் எவ்வாறெல்லாம் எடுத்தாளப்படுகிறது என்னும் சொற்பொருளை ஆய்வதே ஆய்வின் முடிவாகும்.

## முன்னுரை

பச்சை தங்கம், ஏழைகளின் மரம், குறிஞ்சி இன மக்களின் வாழ்வாதாரம் என்று சிறப்பிக்கப்படுகின்ற மூங்கில் புல் வகையைச் சார்ந்த மரம். உலகம் முழுவதும் சுமார் 1400 வகை மூங்கில் இனங்கள் இருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். மூங்கில் வளிமண்டலத்தில் அதிக அளவு ஆக்ஸிஜனை வெளியிடும் தன்மை கொண்ட மரம். சங்க இலக்கியத்தில் கணு என்ற சொல் மூங்கில், கரும்பு முதலியவற்றின் துண்டு பகுதிகளை ஒன்றோடு ஒன்று இணைவது போல காணப்படும் பகுதி என்று பொருள் தருகிறது. திருமணத்தின் போது மணமக்களை வாழ்த்துபவர்கள் “ஆல்போல் தழைத்தும் அருகுபோல் வேர் ஊன்றியும் வாழ்க - ஆனால் மூங்கில் போல் அழியாமல்-வாழ்க”1 என்று வாழ்த்துகின்றனர். அந்த அளவிற்குத் தம் இனத்தோடு பல ஆண்டுகள் இணைந்து கணுக்கணுவாய்த் தோன்றி வளரக்கூடியது மூங்கில். சங்க இலக்கியத்தில் மூங்கிலின் கணு என்ற சொல் எவ்வாறெல்லாம் எடுத்தாளப்படுகிறது என்னும் சொற்பொருளை ஆய்வதே ஆய்வின் நோக்கமாகும்.

## க்ரியாவின் தற்காலத் தமிழகராதி – கணு

க்ரியாவின் தற்காலத் தமிழகராதி கணு என்ற சொல்லுக்கு, கரும்பு, மூங்கில் முதலியவற்றின் இரண்டு துண்டுகளை இணைப்பது போல் இடையில் நிற்கும் சற்று கடினமான பகுதி., Node (in SugarCane, Bamboo, etc.) கைவிரல் முதுகுத்தண்டு முதலியவற்றில் காணப்படும் இணைப்பு, Joint 2 என விளக்கம் தருகிறது.

## தலைவியின் தோள்கள் : அமைக்கண் இடை

அமைக்கண் இடை - மூங்கிலின் இரண்டு கணுக்களுக்கும் நடுவமைத்த பகுதி என அகநானூறு விளக்கம் கூறுகிறது.

"வாங்கு அமைக்கண் இடை கடுப்பயாய்

ஓம்பினள் எடுத்த, தட மென் தோளே" 3

தலைவியின் தோள்கள் மூங்கிலின் இரண்டு கணுக்களுக்கு இடைப்பட்ட இடத்தைப் போன்று மென்மைத்தன்மை வாய்ந்தது என அகநானூறு எடுத்தியம்புகிறது.

"வேய் அமைக்கண் இடை புரை இ"4

"கண்இடை புரையும் நெடுமென் பணைத்தோள்"5

மூங்கிலின் கணுக்களின் இடைப்பகுதியை ஒத்து திரண்டு காணப்படும் தலைவியின் நீண்ட மெல்லிய பருத்த தோள்கள் மூங்கிலின் இரு கணுக்களின் இடைப்பகுதியை ஒத்துள்ளது என அகநானூறு விளக்குகிறது.

மூங்கிலின் கணுக்கள் வெடித்தல் : வேய்க்கண்

"அமைக்கண் விடு நொடி கணக்கலை அகற்றும்

வெம்முனை அருஞ்சுரம் நீந்தி , கைம்மிக்கு"6

சுரவழியில் ஏற்பட்ட தீயால் மூங்கிலின் கணுக்கள் வெடித்த ஒலி கூட்டமான கலைமான்களைத் துரத்தும் என அகநானூறு விளக்கம் தருகிறது.

"காய் கதிர் கடுகிய கவின் அழி பிறங்கல்

வேய்கண் உடைந்த சிமைய" 7

அகநானூறு பாலை நிலப்பாடலில் காயும் சூரியனால் மூங்கிலின் கணுக்கள் உடைந்து சிதறுண்டன எனக் கூறுகிறது.

"நின்றுதின விளிந்த அம்பணை, நெடுவேய்க்

கண்விடத் தெறிக்கும் மண்ணா முத்தம்"8

பாலை நிலப்பாடலில் வெப்பம் நீரை உறிஞ்சியதால் மூங்கிலின் கணுக்கள் வெடிப்புற்றன. அக்கணுக்களிருந்து வெடித்து சிதறிய கழங்கினைப் போன்று முத்துக்கள் காணப்பட்டன.

வேய்க்கண் என்ற சொல்லானது பாலை நிலப்பாடல்களில் வெப்பத்தின் காரணமாக வெடித்து சிதறிய மூங்கிலின் கணுக்களை உணர்த்துகிறது.

தலைவனின் நிலை : கண் கண் அகைய

இரண்டு கணுக்களில் தீப்பற்றிக் கொள்ளும் தன்மையை விளக்குமிடத்து கண் கண் அகைய என்ற சொல்லானது அகநானூற்றில் இடம்பெறுகிறது.

"கவைப்படு நெஞ்சம் கண் கண் அகைய

இருதலைக் கொள்ளி இடைநின்று வருந்தி"9

தலைவன் பொருள் தேட எண்ணுகிறான். அவன் ஆண்மை செல் என்கின்றது. தலைவி மேல் கொண்ட காமம் தடுக்கிறது. இந்நிலையினை இருபுறமும் கணுக்களில் தீப்பற்றிக் கொள்ள ஒரு புறம் செல்ல இயலாது குழாயின் உள்ளே நின்று வருந்துகின்ற எறும்பினைப் போன்று வருந்துகின்றான் தலைவன் என அகநானூறு தலைவனின் நிலையை எடுத்துரைக்கிறது.

மூங்கில் குழாயில் சேமிக்கும் பழக்கம்: கண் திறல்

கணுக்களை உடைய மூங்கில் குழாயில் சேமிக்கும் பழக்கம் சங்க கால மக்களிடையே இருந்த செய்தியைச் சங்க இலக்கிய பாடலான அகநானூற்று பாடல்கள் பதிவு செய்கிறது.

" பைங்குழைத் தழையர் பழையர் மகளிர்

கண் திறல் நீள் அமை கடிப்பின் தொகுத்து"10

இருப்பைப் பூக்களைப் பழையர் மகளிர் கண் திறந்த நீண்ட மூங்கில் குழாயில் தொகுத்து வைத்து அப்பூக்களைச் சிறுகுடியின் தெருக்களில் சென்று விற்றனர் எனும் செய்தி அகநானூறு பாடலால் அறிய முடிகிறது.

" நெடுங்கண் ஆடு அமைப் பழுநி, கடுந்திறல்

பாப்புக் கடுப்ப அன்ன தோப்பி வான் கோட்டு"11

இனிய முதிர்ந்த கனிகளுடன் தேனும் நாற்றமும் உடைய பூநாறு பலாப்பழத்தின் சுளைகளையிட்டுத் தேன் கலந்து கூட்டியாக்கிய கள்ளினை மூங்கிலின் நீண்ட கண்ணிடையே

அமைந்த குழாயில் ஊற்றி அடைத்தனர். மூங்கில் குழாயில் சேமிப்பது பொருளின் தன்மையைக் கெடாமல் பாதுகாக்கும் என்ற உத்தியைச் சங்ககால மக்கள் அறிந்திருந்தனர்.

வேரல் வேலி : சிறு மூங்கில்

இரவில் வந்து மீளும் தலைவனிடத்தில் தோழி விரைவில் தலைவியை மணம் செய்து கொள்ளுமாறு கூறுமிடத்து வேரல் வேலி என்னும் சொல்லானது குறுந்தொகையில் இடம்பெற்றுள்ளது.

வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட! செவ்வியை ஆகுமதி! 12

சிறிய மூங்கிலை வேலியாக கொண்டவிடத்தில், வேரில் பழக் குலைகள் தொங்கும் பலாமரங்கள் நிறைந்த மலைநாட்டுத் தலைவனே! எனத் மலை நாட்டின் வளத்தை விளக்குமிடத்தில் சிறிய மூங்கில் வேரல் வேலி என்னும் சொல்லானது இடம்பெற்றுள்ளது.

இசைக் கருவியில் கணு: கண் அறுத்து

இசைக்கருவிகளை விளக்குமிடத்து மூங்கிலால் செய்யப்பட்ட கணுக்களை உடைய இசைக்கருவிகள் எனப் பதிற்றுப்பத்து விளக்கம் தருகிறது.

"கண் அறுத்து இயற்றிய தூம்பொடு சுருக்கி" 13

மூங்கிலின் கணுக்களை அறுத்து செய்யப்பட்ட நெடுந்தும்பை எனும் இசைக்கருவி எனப் பதிற்றுப்பத்து விளக்கம் தருகிறது. திருப்பரங்குன்றத்தில் எழும் பல்வேறு ஓசைகளை எடுத்துரைக்குமிடத்து புல்லாங்குழலின் கணு என்னும் சொல் இடம்பெறுகிறது.

ஒரு திறம், யாணர் வண்டின் இமிர்இசை எழ,
ஒரு திறம், கண்ஆர் குழலின் கரைபு எழ" 14

திருப்பரங்குன்றத்தில் பல்வேறு ஓசைகள் கேட்கிறது. ஒருபுறம் கணு பொருந்திய குழலிடத்தில் இசை எழுகிறது. மறுபுறம் பண்ணிசை போல வண்டுகள் பறந்து ஒலி எழுப்புகிறது. அதற்கு எதிராக மற்றொரு பக்கம் தும்பி இசை ஊதும் குன்றம் எனச் சிறப்பிக்கப்படுகிறது. பரிபாடலில் கணு என்ற சொல் மூங்கிலின் கணுக்களால் செய்யப்பட்ட புல்லாங்குழல் கருவியை உணர்த்துகிறது.

கண் விடு கழைக் கோல்

சிலம்பின் வெதிரத்துக் கண்விடு கழைக்கோல்
குரங்கின் வன்பழற் பாய்ந்தென, இலஞ்சி
மீன் எறி தூண்டில் நிவக்கும் நாடன்" 15

மூங்கிலின் கணுக்களிலிருந்து தோன்றிய கோலினின்று குரங்குக்குட்டி வேற்றுக்கிளைக்குத் தாவியவுடன் அம்மூங்கில் கோல் குளத்தில் மீனை எரிகின்ற தூண்டிலைப் போல நிமிர்ந்தது என ஐங்குறுநூறு கண்விடு கழைக்கோலுக்கு விளக்கம் தருகிறது.

மூங்கிலின் கணுவை கண்ணென்றும் விளக்குகிறது ஐங்குறுநூறு. அக்கண்ணிடத்தில் கோல்கள் கிளைத்து வருதலால் கண் விடு கழைக்கோல் என ஐங்குறுநூறு விளக்கம் தருகிறது.

முடிவுரை

சங்க இலக்கியத்தில் மூங்கிலின் கணு எனும் தலைப்பில் மூங்கிலின் கணு என்ற சொல் சங்க இலக்கியத்தில் எவ்வாறெல்லாம் எடுத்தாளப் படுகிறது என்பதே ஆய்வின் முடிவாகும். அமைக்கண் இடை, வேய்க்கண், கண் கண் அகைய, கண் திறல், வேரல் வேலி, கண் அறுத்து, கண் விடு கழைக் கோல் போன்ற சொறகள் என்னென்ன பொருளில் சங்க இலக்கியத்தில் எடுத்தாளப்படுகிறது என்னும் சொற்பொருளின் விளக்கத்தை ஆய்வின் முடிவில் உறுதியாக அறிய முடிகிறது.

தொகுப்புரை

1. அமைக்கண் இடை - மூங்கிலின் இரண்டு கணுக்களுக்கும் நடுவமைத்த பகுதி.
2. வேய்க்கண் - மூங்கிலின் கணுக்கள் வெடித்தல்.
3. கண்கண்அகைய-இரண்டுகணுக்களில் தீப்பற்றிக் கொள்ளுதல்.
4. கண் திறல் - கண் திறந்த நீண்ட மூங்கில் குழாய்.

5. வேரல் வேலி - சிறு மூங்கில்
6. கண் அறுத்து - மூங்கிலின் கணுக்களை அறுத்தல்.
7. கண் விடு கழைக் கோல் - மூங்கிலின் கண்ணிடத்தில் கோல்கள் கிளைத்து வருதல்.

பின்னிணைப்பு





**மூங்கிலின் கணு**

சான்றெண் விளக்கம்

1. விக்கி மூலம் , தமிழ்நூல் தொகுப்புக் கலைக் களஞ்சியம். pdf/727
2. க்ரியா, க்ரியாவின் தற்காலத் தமிழக அகராதி, ப .342
3. அகநானூறு, 18 :17
4. அகநானூறு, 152 :23
5. அகநானூறு, 271: 15
6. அகநானூறு, 47:7
7. அகநானூறு, 399:17
8. அகநானூறு, 173:13-14
9. அகநானூறு, 339:8-9
10. அகநானூறு, 331:6
11. அகநானூறு, 346:6-7
12. குறுந்தொகை, 18.1-2.
13. பதிற்றுப்பத்து, 41:4
14. பரிபாடல், 17:11
15. ஐங்குறுநூறு, 278:1

துணை நூற்பட்டியல்


1. விக்கி மூலம், தமிழ்நூல் தொகுப்புக் கலைக் களஞ்சியம்.pdf
2. க்ரியா,
   க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி,
   தமிழ்- ஆங்கிலம் -ஆங்கிலம்,
   இரண்டாம் பதிப்பு,
   க்ரியா, சென்னை,2008.

**3.** *செயபால், இரா.*
*அகநானூறு மூலமும் உரையும் (புத்தகம் 1&2)*
*நான்காம் பதிப்பு*
*நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்*
*சென்னை, 2011.*

**4.** *செயபால், இரா.*
*குறுந்தொகை (புத்தகம் 1&2)*
*நான்காம் பதிப்பு*
*நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்*
*சென்னை, 2011.*

**5.** *ஆலிஸ், அ*
*பதிற்றுப்பத்து மூலமும் உரையும்*
*நான்காம் பதிப்பு*
*நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்*
*சென்னை, 2011.*

**6.** *உ.வே.சா.பதிப்பு*
*பரிபாடல் மூலமும் பரிமேலழகர் உரையும்,*
*ஏழாம் பதிப்பு*
*உ.வே.சா.நிலையம் ,*
*சென்னை, 2012.*

**7.** *உ.வே.சா.பதிப்பு*
*ஐங்குறுநூறு*
*ஏழாம் பதிப்பு*
*உ.வே.சா.நிலையம் ,*
*சென்னை, 2012.*

********* ********* ********** ********* ********* ********** ********** **********